


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2025) மாமல்லபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவரும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநிலத் துணைத் தலைவருமான கே. நவாஸ்கனி எம்.பி.யின் மகன் ந.அப்சர் ஜே.எஸ்.ரீஷ்மான் அப்ரா இணையரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கௌதம சிகாமணி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### இசுரேலின் வன்முறைப் பாதை!

# உலக நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!


சென்னை, ஜூன் 15–

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**ஈரான் மீது இசுரேல் தொடுத்து வரும் தாக்குதல்கள் பெரும் போரை மூளச் செய்யும் பொறுப்பற்ற செயலாகும். ஏற்கெனவே காசாவில் தொடர்ந்து குண்டுகளை வீசி பாலஸ்தீன மக்கள் அல்லலுற்று வரும் வேளையில் இசுரேலின் இந்த வன்முறைப் பாதை கண்டிக்கத்தக்கது.**

**உலக நாடுகள் அனைத்தும் இதனைக் கட்டுப்படுத்தவும், நீதிக்கும், பொருள் பொதிந்த பேச்சுவார்த்தைக்கும் வலியுறுத்த வேண்டும். இனி வேண்டாம் போர்கள்!"**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



### பிரதமர் பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம்

# ஒன்றிய அரசை விட மாநில அரசுதான் அதிக நிதி அளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 15 –

பிரதமர் பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் ஒன்றிய அரசைவிட மாநில அரசுதான் அதிக நிதி அளிக்கிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத்தளப்பதிவிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச்செயல்படுத்தப்படும்திட்டங்களுட்கெல்லாம் அவர்களைக் காட்டிலும்



State's share higher than that of Union govt.'s in funding for at least six Central schemes

Chief Minister M.K. Stalin referred to these schemes in his speech at a government event in Salem and said that with only the contribution of the Centre, it was not possible to implement them

Uneven split

அதிகமாகப் படியளப்பது மாநில அரசுதான்!

படையப்பா படக் 'காமெடி' போல "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது" எனச் சேலம் அரசு விழாவில் பேசியிருந்தேன். பேசினேன் என்பதைவிட பேசவேண்டிய நிலைக்கு உள்துறை அமைச்சரின் அடிப்படையற்ற குற்றச்சா ட்டால் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும்.

அது 'தி இந்து' நாளிதழில் செய்தியாகி, தரவுகளோடு விவரிக்கப்ப ட்டுள்ளது. இனியாவது, கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பழக்கத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு ள்ளார்.

### அரிமா ஆ ர்.என்.துரை தலைமையில் திருவல்லிக்கேணி பகுதி

# 119(அ) வட்ட கழக துணைச் செயலாளர் க.ரவி இல்ல திருமண வரவேற்பு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

*சென்னை, ஜூன் 15 -*

*திருவல்லிக்கேணி பகுதி 119 அ வட்ட துணைச் செயலாளர் க.ரவி இல்ல திருமண விழா மணமக்கள் ர.அசோக் குமார் - ECS பா.சங்கீதா ஆகியோரது மணவிழா வரவேற்பு இன்று (15- 06-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் நல்வாழ்வு திருமண மண்டபம் ராயப்பேட்டையில் நடைபெறுகிறது.*

*இதில் மாவட்ட கழக துணை செயலாளர் அரிமா. ஆர்.என்.துரை தலைமை தாங்கிட, பகுதிச் செயலாளர்கள ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., கே. திருநா வுக்கரசு (பகுதி துணை செயலாளர்), வே. கமலா செழியன் (பொதுக்குழு உறுப்பினர்) ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*வட்டச் செயலாளர்கள் லைனர்.கே.பிரபு, க.வே. மோகன், ஐ.சி.எப். எம்.சங்கர் ஆகியோர் வரவேற்கின்றனர்.*



*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (கழக இளைஞரணி செயலாளர்), நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு எம்.சி., மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*மேலும் து.விக்டர், வி. எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ. அகஸ்டின்பாபு, சி.எச்.சேகர், மரு.சுபேர்கான், வி.பி. பொன்னரசு, இறையன்பன் குத்தூஸ், வி.என்.ராஜன், ரவி ராஜ்குமார், மரு.அபிஸ் வுல்லா, ப.பிரகாஷ், ஏ.விஜய ராஜ், இ. இளம்பாரதி, எம். கே. ஆனந்த், வி.ஆர்.விஜய், ச. அசோக்குமார், எம்.யோகேஸ்வரி, லதாபிளாரன்ஸ், வே.தேவேந்திரன், ம.தயாநிதி, சி.தினகரன், எம்.பிரேம் ராஜா, ஆர்.பத்மாவதி, ஜெ. விஜயகுமார், கே.ஜி. செந்தில் குமார், என்.ரவி, எஸ்.சசிகுமார், எம்.கலீல்ரகுமான், ஆர். ராஜ்குமார், ஆர்.சசிகுமார், ஆர்.கஜேந்திரன், எம்.கமல்நாதன், எஸ்.விஜயகுமார், எஸ். துளசிராமன், மங்கைராஜ்குமார், வி.தினேஷ் குமார், ஜெ.கதிரவன், எ.ரகுமான் ஷெரிப், க.ஜெகன், ஆர்.ரஞ்சித், புல்லட் பி.கணேசன், ஆர்.சபிதா, எம்.எ.சஜ்ஜாத், மரு.எம். டி.சீனிவாசன், ஏ.விக்னே ஸ்வரன், கு.சரவணகுமார், ஆர்.ரஞ்சித்குமார், வி.தேசராணி, எம்.அஸ்வினி, சி.வாசன், ஜெ.அன்பரசு, ஆ.காமாட்சி, கோ.மகேஷ், எம்.எஸ்.வசந்த், கோ.தனசேகரன், ச.ரமேஷ், ஆர்.ராதாகிருஷ்ணன், டி.ஜெப ஸ்டின், எஸ்.அழகம்மாள் எ சித்ரா, மு.ஜோதீஸ்வரன், எ அசோக், போட்டோ.அசோக், க. மோகன், டி.குப்புசாமி, மோ. பிரபு, மு.சங்கர், என்.செல்வி, க.ராகுல்காந்தி, ஆர்.சிலம்பரசன், எஸ்.கற்பகவல்லி, ஆர். ஹரி, கே.வினோத், ஆர்.மணிகண்டன், சி .மீனாட்சி, மு. கோவிந்தராஜ்,டி.சசிகுமார், மு. தேவா, து.லோகேஷ்குமார், ஆர்.ராஜேந்திரன், கு. சதீஷ், எம்.சங்கர், எஸ்.சாந்தி, உ. ஹேமவதி, எம்.நவநீதராஜ், பி.ஜெயலக்ஷ்மி, ஜெ.மைதிலி, மு.பிரபாகர், ச.ம.ஹரிகரன், பி.மனோஜ், பி.ஷோபி, எ. இராமதாஸ், எஸ்.ஸ்ரீ ராம், க.கற்பகவள்ளி, எஸ்.ஸ்ரீநாத், எ.இந்திராதேவி, ஆர்.பாபு, சி.வடிவேல்முருகன், ஆர். புனே ஸ்வரன், எம்.நந்தகுமார், ச.கல்பனா, சி.நவீன்குமார், கே.பத்மாவதி வேஜோதி*

*நன்றியுரை ஏ.பி.வேலு, வே. சௌந்தரராஜன், க.அருண், ஆர்.அரவிந்த் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

# 'நெய்தல் கலைத் திருவிழா - 2025' முன்னேற்பாட்டுப் பணிகள்! கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு!

தூத்துக்குடி, ஜூன் 15–

தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிகம் போன்றவற்றைப் பறைசாற்றும் வகையில் தூத்துக்குடியில் ஜூன் 13 முதல் 15 ஆம் தேதி வரை 4–வது நெய்தல் கலைத் திருவிழா தூத்துக்குடி வ.உ.சி கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, செய்யப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி 12.06.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். நெய்தல் கலைத் திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 300–க்கும் மேற்பட்ட மண் சார்ந்த கலைஞர்கள், தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். இந்த விழாவானது மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

இந்த விழாவில் கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பறையாட்டம், குச்சியாட்டம், துடும்பாட்டம், ஜிம்பளா மேளம், பொய்க்கால் குதிரை, கிராமிய நிகழ்ச்சி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெய்தல் திருவிழாவின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பாரம்பரிய உணவு வகைகளை அறிந்து கொள்ளும் வகையில் 20–க்கும் மேற்பட்ட அரங்குகள் மற்றும் நபார்டு சார்பில் 30க்கும் மேற்பட்ட காட்சிப்படுத்தப் பட உள்ளது.

முதல் நாளான ஜூன் 13–ம் தேதி தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளி சார்பில் நிகழ்ச்சி தொடக்க விழா, மங்கல இசை நிகழ்ச்சி, சார்பில் அபிநயா நிருத்தாலய நடன பள்ளியின் சமர் கலைக்குழு சார்பில் பரதநாட்டியம். பால் ஜேக்கப்பின் ஃபங்கி போதியின் சென்னை சங்கமத்தின் (2025) தொடக்க விழா இசை. சோல்டவுட் இசைக்குழுவின் ஒளி இசை நிகழ்ச்சி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம் - சென்னை வளர்ச்சிக் கழகம் சார்பில்

# 12-வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டின் இணைய தளம் தொடக்கம்- விளக்க அறிக்கை வெளியீடு!

## அமைச்சர் சா.மு.நாசர் - டாக்டர் ஜி.விசுவநாதன் - டாக்டர் வி.ஆர். எஸ்.சம்பத் சிறப்புரை!

*சென்னை, ஜூன் 15 -*

*உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம் மற்றும் சென்னை வளர்ச்சிக்கழகம், சார்பில் 12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டின் (வாஷிங்டன், டி.சி - அமெரிக்கா) இணையதளத் தொடக்கமும் மாநாட்டு விளக்க அறிக்கை வெளியீடும் அறிமுக விழா நாளை திங்கள், 16 ஜூன் 2025 திங்கள் மாலை 4:30 மணிக்கு ஹோட்டல் லீ ராயல் மெரிடியன், கிண்டியில் நடைபெறுகிறது.*

*சென்னை முதன்மை விருந்தினராக சிறுபான்மை நலத்துறை மற்றும் அயலகத்தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர் கலந்து கொள்கிறார். விஐடி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் தலைமை தாங்குகிறார்.*

*சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் பழனி, ஜி.பெரியசாமி (தலைவர், பிஜிபி குழுமம்), எம்.எம். அப்துல்லா எம்.பி., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மாதா மருத்துவக் கல்லூரி தலைவர் டாக்டர் பீட்டர், வி.மகாலிங்கம், ஐ.எப்.எஸ் (ஓய்வு) - முன்னாள் இந்தியத் தூதுவர் (கயானா) தமிழ்நாடு அறக்கட்டளை, USA முன்னாள் தலைவர், வீரவேணுகோபால், சேலம் சட்டக் கல்லூரி தலைவர் - டாக்டர் டி.சரவணன், பிரசிடெண்ட் குரூப், சென்னை. தலைவர் ஏ.அபுபக்கர், மெகா டிவி. சென்னை தலைவர், திருமதி. ஜெயந்தி தங்க பாலு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*இவ்வாறு உலகத் தமிழர் பொருளாதார நிறுவனத் தலைவர் டாக்டர் வி.ஆர். எஸ்.சம்பத் தெரிவித்துள்ளார்.*

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி. ஆலோசனை!

# தாம்பரம் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

*காஞ்சிபுரம், ஜூன்.15-*

*தாம்பரம் சட்ட மன்ற கழக நிர்வாகிகள் கலந்துரையாடர் கூட்டம் வருகிற 20-ஆம் தேதி காலை தாம்பரத்தில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறுகிறது என்றும் இக்கூட்டத்தில் கழக துணைபொது செயலாளர் - மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்பந்தமாக கழக நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசிக்க உள்ளார் என்றும் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-*



*தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் வருகிற 20.6.2025 வெள்ளிகிழமை காலை 11.00 மணியளவில் மேற்கு தாம்பரம் முடிச்சூர் சாலையில் அமைந்துள்ள சஞ்சீவி மகால் திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் - தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.*

*தாம்பரம் தொகுதி கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் ஆ. ராசா அவர்கள் பங்கேற்று சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்பந்தமாக கழக நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசிக்க உள்ளார்.*

*இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்,*

*தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி - ஒன்றிய கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகராட்சி மேயர் மற்றும் இத்தொகுதியில் அடங்கியுள்ள மாநகர கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட-மாநகர அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.*



திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் திருவொற்றியூர் பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் வரவேற்பில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் டி.கே.பி.திருமண மாளிகையில் நடைபெற்றது. சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். தேர்தல் பணி குறித்து கழக துணை பொதுச் செயலாளர், மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. ஆலோசனை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், தொகுதி மேற்பார்வையாளர் எஸ்.மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் பெண்கள் கணினி அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் "அப்பா இலவச கணினி பயிற்சி முகாம் அலுவலகம் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகியவற்றில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, அந்தியூர் ப.செல்வராசு எம்.பி. ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன் ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, கதிரம்பட்டி மகாலிங்கம், எல்லப்பாளையம் சிவக்குமார், மாநகர மு.சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.